Royal College of Anaesthetists

# மயக்க மருந்து வழங்கல் – ஆபத்துகளும் பக்க விளைவுகளும்

# அனாஃபைலாக்ஸிஸ் (கடுமையான ஒவ்வாமை)

## இந்தச் சிற்றேட்டைப் பற்றி

பொது மயக்க மருந்தின் போது **கடுமையான ஒவ்வாமை எதிர்வினை (அனாஃபைலாக்ஸிஸ்)** ஏற்படுவதற்கான அபாயம் குறித்து இந்தத் துண்டுப்பிரசுரம் தெரிவிக்கிறது. இது ஒவ்வாமை எதனால் ஏற்படக்கூடும் என்பதையும், அதைப் பற்றி என்ன செய்ய முடியும் என்பதையும் விளக்குகிறது.

பொது உணர்ச்சி நீக்கிகள் என்பவை, ஆழமான தூக்கத்தைப் போன்ற நிலையை வழங்கக்கூடிய மருந்துகளாகும். சில அறுவைச் சிகிச்சைகள் மற்றும் செயல்முறைகளுக்கு இவை தேவைப்படுகின்றன. உங்களுக்கு ஒரு பொது உணர்ச்சி நீக்கி வழங்கப்பட்டால் நீங்கள் மயக்க நிலையில் இருப்பீர்கள், எதையும் உணரமாட்டீர்கள்.

நீங்கள் எங்கள் இணையத் தளத்தில் வெவ்வேறு வகை உணர்ச்சி நீக்கி மருந்துகளைப்பற்றிப் படிக்கலாம். அது வெவ்வேறு மொழிகளில் கிடைக்கிறது. அதற்கான முகவரி: www.rcoa.ac.uk/patientinfo/translations#languages.

## அனஃபைலாக்சிஸ் என்றால் என்ன?

அனஃபைலாக்சிஸ் என்பது ஒரு கடுமையான தீவிர எதிர்வினையாகும். பொது உணர்ச்சி நீக்கி வழங்கலின்போது, நோயாளி விழித்திருக்கிற நேரத்தில் அல்லது தூங்கிக்கொண்டிருக்கிற நேரத்தில் இது நடக்கலாம். பல நேரங்களில், அறுவைச் சிகிச்சையின்போது பயன்படுத்தப்படும் பிற மருந்துகளுக்கான எதிர்வினையாக இது அமைகிறது. பொதுவாக இது மிக விரைவாக நடக்கிறது. இது உயிருக்கு அச்சுறுத்தலாக அமையலாம். ஆனால், அப்படி நேர்ந்தால், உங்கள் மயக்க மருந்து வல்லுனர் உங்களுக்கு விரைவாகச் சிகிச்சையளிப்பார்.

உங்களுக்கு ஓர் ஒவ்வாமை எதிர்வினை ஏற்பட்டால்:

- உங்கள் இரத்த அழுத்தம் குறையலாம்
- உங்களுக்கு மூச்சுவிடுதலில் சிரமம் ஏற்படலாம்

- உங்களுக்கு வீக்கம் மற்றும் தோல் தடிப்புகள் ஏற்படலாம்.

## இது நிகழ எவ்வளவு வாய்ப்புள்ளது?

ஒவ்வொரு 10,000 பேரில்

| | |
|---|---|
| **1 பேருக்கு அனஃபைலாக்சிஸ் ஏற்பட்டது** | **9,999 பேருக்கு ஏற்படவில்லை** |

இந்த எண்கள் ஆராய்ச்சிகளிலிருந்து வருகின்றன. நாங்கள் இந்த எண்களை எங்கிருந்து பெற்றோம் என்பதை நீங்கள் எங்கள் இணையத் தளத்தில் காணலாம்: www.rcoa.ac.uk/patientinfo/risks/evidence.

## பொது உணர்ச்சி நீக்கி வழங்கலின்போது எதனால் அனஃபைலாக்சிஸ் ஏற்படுகிறது?

உங்கள் மயக்க மருந்து வல்லுனர் பொது உணர்ச்சி நீக்கி வழங்கலின்போது வெவ்வேறு வகை மருந்துகளைப் பயன்படுத்துகிறார்.

பொதுவாக, இந்த மருந்துகள் தீவிர எதிர்வினையை உண்டாக்குகின்றன:

- **ஆன்ட்டிபயாடிக்குகள்:** இவை நோய்த்தொற்று வாய்ப்பைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன
- **தசை தளர்த்திகள்:** இவை குறிப்பிட்ட அறுவைச் சிகிச்சைகளுக்குத் தேவைப்படுகின்றன
- **பிற மருந்துகள் அல்லது பொருட்கள்:** சிலருக்கு எதிர்வினையை உண்டாக்கக்கூடிய அழுகலைத் தடுக்கும் மருந்துகள் (ஆன்ட்டிசெப்டிக்) அல்லது சாயங்கள்.

சில குறிப்பிட்ட பொருட்களுக்கு உங்களுக்கு ஒவ்வாமை இருந்தால், உங்கள் மயக்க மருந்து வல்லுனர் வேறு உணர்ச்சி நீக்கிகள் மற்றும் மருந்துகளைப் பயன்படுத்தலாம்.

## எனக்கு ஓர் ஒவ்வாமை எதிர்வினை ஏற்பட்டால் என்ன செய்வது?

உங்களுக்கு மயக்க மருந்து கொடுக்கப்படும்போது உங்கள் மயக்க மருந்து வல்லுனர் உங்களைக் கவனமாகக் கண்காணிக்கிறார். அப்படி நேர்ந்தால், அவர்களால் உங்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்க இயலும். அவர்கள் உங்களுக்கு இவற்றைக் கொடுக்கலாம்:

- ஓர் அட்ரீனலின் ஊசி
- ஒரு முகமூடி வழியாக பிராணவாயு

- உங்கள் கை அல்லது முன் கையிலுள்ள ஒரு நரம்பில் நேரடியாகச் செலுத்தப்படும் ஒரு கானுலா ('சொட்டு') வழியாகத் திரவங்கள் அல்லது மருந்துகள்.

அறுவைச் சிகிச்சை தொடங்குவதற்குமுன் உங்களுக்கு ஓர் ஒவ்வாமை எதிர்வினை ஏற்பட்டால்:

- உங்கள் அறுவைச் சிகிச்சை மிகவும் அவசரமானால், அவர்கள் உங்களுக்குச் சிகிச்சை அளித்து அறுவைச் சிகிச்சையைத் தொடரச் செய்வார்கள். ஆனால், அவ்வாறு செய்வது பாதுகாப்பாக இருந்தால் மட்டும் தான் அவர்கள் அதைச் செய்வார்கள்
- உங்கள் குழு உங்கள் அறுவைச் சிகிச்சையைத் தள்ளிப்போடத் தீர்மானிக்கலாம்
- உங்கள் அறுவைச் சிகிச்சையை மறுதிட்டமிடுவதற்கு முன்பாக, உங்கள் குழு உங்களை ஓர் ஒவ்வாமை மருந்தகத்திற்கு அனுப்பலாம் அல்லது ஓர் ஒவ்வாமை வல்லுனரிடமிருந்து அறிவுரை பெறலாம்.

அறுவைச் சிகிச்சை தொடங்கிய பிறகு உங்களுக்கு ஓர் ஒவ்வாமை எதிர்வினை ஏற்பட்டால்:

- உங்கள் மயக்க மருந்து வல்லுனர் உங்களுக்கு உடனடியாகச் சிகிச்சையளிப்பார்
- உங்கள் அறுவைச் சிகிச்சை நிறுத்தப்படலாம். உங்கள் எதிர்வினை எவ்வளவு தீவிரமானது மற்றும் உங்கள் அறுவைச் சிகிச்சை எவ்வளவு அவசரமானது என்பதைப் பொறுத்து அறுவைச் சிகிச்சையை நிறுத்தும் தீர்மானம் அமையும்.

உங்களுக்குத் தீவிரமான ஒவ்வாமை எதிர்வினை ஏற்பட்டால், நீங்கள் அன்று இரவு மருத்துவமனையில் தங்கவேண்டியிருக்கலாம். உங்கள் ஒவ்வாமை எதிர்வினை மிகத் தீவிரமாக இருந்தால், ஒரு தீவிரச் சிகிச்சைப் பிரிவில் (ICU) நீங்கள் இன்னும் கவனமாகப் பார்த்துக்கொள்ளப்படலாம்.

எதிர்வினையின்போது நீங்கள் ஓர் இரத்தப் பரிசோதனைக்கு உட்படவேண்டியிருக்கலாம். நீங்கள் ஓர் ஒவ்வாமை மருந்தகத்துக்கு அனுப்பப்பட்டால், அங்கும் உங்களுக்கு ஓர் இரத்தப் பரிசோதனை செய்யப்படலாம். இது ஒவ்வாமை எதிர்வினையா அல்லது வேறொன்றா என்பதை ஒவ்வாமைக் குழுவினர் தீர்மானிப்பதற்கு இது உதவும்.

## நானாகவே என்ன செய்யலாம்?

- உங்களுக்கு ஏதேனும் ஒரு வகை ஒவ்வாமை இருந்தால், உங்கள் செவிலியர் அல்லது மயக்க மருந்து வல்லுனரிடம் அதைச் சொல்லுங்கள். அவர்கள் உங்களை அறுவைச் சிகிச்சைக்காக மதிப்பிடும்போது (இது அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீடு என அழைக்கப்படுகிறது) ஒவ்வாமைகளைப்பற்றி உங்களிடம் கேட்பார்கள்.
- நீங்கள் மருத்துவமனைக்குச் செல்லும்போது, ஒவ்வாமைகளைப்பற்றிப் பல முறை கேட்கப்படும். இது இயல்பானதுதான்.
- மருத்துவமனைக்கு, மருத்துவச் சந்திப்புகளுக்குச் செல்லும்போது மற்றும் அறுவைச் சிகிச்சை நாளில் உங்களுடன் ஓர் ஒவ்வாமைப் பட்டியலைக் கொண்டுவாருங்கள்.

- இதற்குமுன் உங்களுக்கு ஓர் ஒவ்வாமை எதிர்வினை ஏற்பட்டதாக நீங்கள் நினைத்தால், அப்போது என்ன நடந்தது என்று கண்டறிய முயலுங்கள். நீங்கள் இவற்றைச் செய்யலாம்:
  - அப்போது உங்களைக் கவனித்துக்கொண்ட குழுவிடம் கேட்கலாம்
  - என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்காக உங்கள் பொது மருத்துவரிடம் (GP) பேசலாம்.
- உங்களுக்கு ஏதேனும் ஒவ்வாமைகள் இருந்தால், உங்கள் உறவினர்கள் அல்லது கவனித்துக்கொள்பவர்களிடம் அதைச் சொல்லுங்கள். உங்களுக்கு நெருக்கடி நேரப் பராமரிப்பு தேவைப்பட்டால், அல்லது, உங்கள் உடல் நலம் மிகவும் சரியில்லாவிட்டால், உங்கள் ஒவ்வாமைகளைப்பற்றி அவர்கள் உங்கள் குழுவிடம் சொல்லலாம்.

## ஒவ்வாமைப் பரிசோதனைகள்

அறுவைச் சிகிச்சைக்கு முன்பாக ஒவ்வாமைப் பரிசோதனைகள் செய்வது வழக்கமில்லை. கடந்தகாலத்தில் ஒவ்வாமை எதிர்வினையைக் கொண்டிருந்தவர்களுக்கு மட்டும் தான் இது பரிந்துரைக்கப்படுகிறது.

**உங்களுக்குக் கடுமையான ஒவ்வாமை எதிர்வினை ஏற்பட்டால், ஒவ்வாமைப் பரிசோதனைகள் செய்வதற்காக நீங்கள் ஒரு சிறப்புப் பிரிவுக்குப் பரிந்துரைக்கப்பட வேண்டும்.**

இந்தப் பரிசோதனைகள் பொதுவாகத் ‘தோல் பரிசோதனைகளாக' இருக்கும். ஒரு உடல்நல வல்லுனர் உங்கள் தோலில் மருந்துகளைச் சிறு துளிகளாக விடுவார், சில நிமிடங்களுக்குப்பிறகு, அதனால் ஏதேனும் எதிர்வினை உண்டாகிறதா என்று பார்ப்பார். பொதுவாக இது ஒரு சிறு, அரிக்கின்ற கட்டியாக இருக்கும்.

உங்களுக்கு ஒரு மருந்துக்கு ஒவ்வாமை இருந்தால், அந்த மருந்தை நீங்கள் மீண்டும் எடுத்துக் கொள்ளாமல் இருப்பது மிகவும் அவசியம்.

- அதே போன்ற வேறு மருந்துகளும் இருக்கலாம். அவற்றையும் நீங்கள் தவிர்க்கவேண்டும்.
- இதுபற்றி ஒவ்வாமை மருந்தகத்திலிருந்து உங்களுக்கு ஒரு கடிதம் வரும். உங்களது அனைத்து மருத்துவச் சந்திப்புகளுக்கும் இந்தக் கடிதத்தை உங்களுடன் கொண்டு வாருங்கள்.
- உங்களுக்கு அவசரச் சிகிச்சை தேவைப்படும் பட்சத்தில், நீங்கள் எல்லா நேரங்களிலும் ஒரு விழிப்பூட்டல் வளையலை அணியுமாறு அறிவுறுத்தப்படலாம்.

## ஒவ்வாமைகள் குடும்பத்தில் பரவுமா?

ஒவ்வாமைகள் குடும்பத்தில் பரவுவதில்லை.

கடுமையான எதிர்வினைகளை உண்டாக்கக்கூடிய சில மருத்துவ நிலைகள் குடும்பத்தில் பரவக்கூடும். இவை, சக்சாமெத்தோனியம் அப்னியா மற்றும் மாலிக்னன்ட் ஹைப்பர்தெர்மியா. இவை ஒவ்வாமைகள் அல்ல. ஆனால், உங்கள் குடும்பத்தில் யாருக்காவது இந்த நிலைகள் இருந்தால், அதைக் கண்டிப்பாக உங்கள் மயக்க மருந்து வல்லுனரிடம் சொல்லவேண்டும்.

சக்ஸாமெத்தோனியம் அப்னியா (www.rcoa.ac.uk/patientinfo/suxamethonium-apnoea) மற்றும் மாலிக்னன்ட் ஹைபரதெர்மியா (www.rcoa.ac.uk/patientinfo/malignant-hyperthermia) பற்றிய கூடுதல் தகவல்கள் எங்கள் இணையதளத்தில் கிடைக்கின்றன.

## அனஃபைலாக்சிஸ் பற்றிய கூடுதல் தகவல்களை நான் எங்கு பெறலாம்?

- அலர்ஜி UK: www.allergyuk.org
- உங்கள் பொது மருத்துவர், அல்லது உங்கள் மருத்துவமனையின் அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டு மருந்தகம் அல்லது உணர்ச்சி நீக்கி வழங்குதல் துறை.

## பொறுப்பு துறப்பு

இந்தச் சிற்றேட்டில் உள்ள தகவல்கள் துல்லியமாகவும் சமீபத்தியவையாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால், இதற்கு எங்களால் உத்தரவாதம் அளிக்க இயலாது. இந்தப் பொதுத் தகவலின் மூலம் உங்களுக்கு இருக்கக்கூடிய எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடைத்துவிடும் என்றோ, உங்களுக்கு முக்கியமாக இருக்கக்கூடிய அனைத்தையும் இதனால் கையாள இயலும் என்றோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் உங்களுடைய தெரிவுகளை, உங்களுக்கு இருக்கும் எந்தவொரு கவலைகளையும் உங்கள் மருத்துவக் குழுவுடன் விவாதிக்கவேண்டும், அதற்கு இந்தச் சிற்றேட்டை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தலாம். இந்தச் சிற்றேட்டைமட்டும் ஓர் அறிவுறுத்தலாகக் கருதக்கூடாது. எந்தவொரு வணிக அல்லது தொழில் நோக்கத்துக்கும் இதைப் பயன்படுத்த இயலாது. முழுப் பொறுப்பு துறப்புக்கு, இதைப் பாருங்கள்: (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders என்ற மொழிபெயர்ப்பாளர் சமூகத்தால் வழங்கப்படுகின்றன. இந்த மொழிபெயர்ப்புகளின் தரம், மொழிபெயர்ப்புகளை முடிந்தவரை துல்லியமாக மாற்றுவதற்காக சரிபார்க்கப்படுகிறது, ஆனால் தவறான மற்றும் சில தகவல்களை தவறாகப் புரிந்துகொள்வதற்கான ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களிடம் சொல்லுங்கள்

இந்த காகிதத்துண்டு பிரசுரத்தை விருத்தி செய்ய ஆலோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

நீங்கள் ஏதேனும் கருத்துகளைச் சொல்ல விரும்பினால், அவற்றை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்: patientinformation@rcoa.ac.uk

## www.rcoa.ac.uk

ஆறாம் பதிப்பு, நவம்பர் 2024

இந்த சிற்றேடு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் மதிப்பாய்வு செய்யப்படும்.

**© 2024 Royal College of Anaesthetists**
நோயாளித் தகவல் தாள்களை உருவாக்கும் நோக்கத்துக்காக இந்தச் சிற்றேட்டை நகல் எடுத்துக்கொள்ளலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்தச் சிற்றேட்டின் ஒரு பகுதியை நீங்கள் இன்னொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், சரியான ஒப்புகை வழங்கப்பட வேண்டும், வணிகச் சின்னங்கள், அடையாளக் குறியிடுதல், படங்கள் மற்றும் படவுருக்கள் நீக்கப்படவேண்டும். மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.